பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 13 திங்கட்கிழமை 26.01.2020 கதிர் 83

**இது ரகசியம் அல்ல!**

வரப்போகும் பொதுத் தேர்தல் தான் பெரும்பாலும் எல்லோருடையதும் பேசுபொருள்.

அதுவும் தமிழர் பக்கத்தில் யார், யாருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கும் என்ற விவகாரம்தான் முக்கிய விடயம். குறிப்பாகத் பக்கம் 02 »

# கோட்டா - மஹிந்த இடையே பிளவை ஏற்படுத்த முயற்சி!

## ஐ.தே.கவைச் சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் பிரிக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இந்தச் செயற்பாட்டில் அவர்களால் வெற்றியடைய முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். பக்கம் 03 »

## கணவன் இறந்த செய்தியை கேட்டு மயங்கிச் சரிந்து மரணித்த மனைவி

### கொல்லங்கலட்டியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.27

கணவன் இறந்த செய்தியை கேட்டு அதிர்ச்சி அடைந்த மனைவியும் மயங்கி விழுந்து மரணமடைந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் பக்கம் 03 »

## பிரதேச சபையின் உறுப்பினர் மீது இனந்தெரியாதோர் வாள்வெட்டு!

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று இரவு 7 மணியளவில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் ஈ.பி.டி.பி. கட்சியைச் சார்ந்த பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினரான செபமாலை செபஸ்ரியன் என்பவர் பக்கம் 03 »

## கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிய செயற்பாட்டுக் குழு !

யாழ்ப்பாணம், ஜன. 27

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிய தேசிய செயற்பாட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நாடு தழுவிய ரீதியில் இக்குழுவின் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த தேசிய பக்கம் 03 »

## இலங்கைக்குப் பெருமை சேர்த்த வடக்கு குத்துச்சண்டை வீரர்கள்!



கொழும்பு, ஜன. 27

பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச கிக் பொக்சிங் (kick boxing) பக்கம் 03 »

## ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்தது



கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் நேற்று முன்தினம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பக்கம் 03 »

## சர்ச்சைக்கு முடிவு கட்டுவதற்கு கூடுகிறது ஐ.தே.க. செயற்குழு

கொழும்பு, ஜன. 27

தலைமைத்துவம் மற்றும் பிரதமர் வேட்பாளர் உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் கூடவுள்ள மத்திய செயற்குழுவில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாகக் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு வாக்கெடுப்பின்றித் தீர்வை வழங்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றத்தின் பின் வரிசை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை தொடர்பாகவும் இன்றைய மத்திய குழுவில் ஆராயப் பக்கம் 03 »

## கூட்டமைப்புடன் பேசுவதற்கு அழைப்பு இன்னும் இல்லை!

கொழும்பு, ஜன. 27

கூட்டமைப்புடனான கலந்துரையாடலுக்கு இதுவரை உத்தியோகபூர்வ அறிவித்தல் கிடைக்கவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் அண்மையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் பக்கம் 03 »

## ஐ.தே.க. முரண்பாடுகளுக்கு இவ்வாரத்தில் தீர்வு கிட்டும்

கொழும்பு, ஜன. 27

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்படும் முரண்பாடுகளுக்கு அடுத்த வாரத்துக்குள் தீர்வு கிடைக்கும் என்று கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தற்போது வரை மேற்படி விவகாரம் தொடர்பான பல இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார். (ஐ)


## மிக விரைவில் ஊடகங்களின் ஊடாக விளக்குவாராம் அர்ஜுன மகேந்திரன்!

கொழும்பு, ஜன. 27

பிணைமுறி விவகாரம் தொடர்பாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உரிய தெளிவுப்படுத்தலை விரைவில் ஊடகங்கள் ஊடாக முன்னெடுப்பார் எனத் தகவல் மற்றும் தொடர் பக்கம் 03 »

## ஐ.தே.க. தலைமையில் மாற்றம் அவசியமானது

### வலியுறுத்துகிறார் பொன்சேகா



கொழும்பு, ஜன. 27

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை மாற வேண்டுமென்றே மக்கள் தற்போது எதிர் பக்கம் 03 »

## புதிய அரசின் பக்கம் செல்லவே மாட்டோம்!

### புதிய கூட்டணி குறித்து மனோ

கொழும்பு, ஜன. 27

புதிய அரசின் பக்கம் ஒருபோதும் செல்லமாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி, தலைமைத்துவப் பிரச்சினையை விரைவில் தீர்த்துக்கொண்டு புதிய பக்கம் 03 »

காலைக்கதிர்
Kalaikathir



# புளியங்குளம், ஓமந்தைப் பிரதேசங்களில் பொலிஸ் - இராணுவம் சேர்ந்து சோதனை






வவுனியாவில் ஏ9 வீதியில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளை நேற்றுக் காலை தொடக்கம் மேற்கொண்டனர்.

வவுனியா புளியங்குளம், ஓமந்தை மற்றும் அதனைய அண்டிய பகுதிகளிலேயே இவ்வாறு அதிகளவான பொலிஸாரும் இராணுவமும் இணைந்து தேடுதல் நடத்துகின்றனர்.

வீதியால் செல்லும் பேருந்துகள் மற்றும் வாகனங்கை நிறுத்தி சோதனை செய்யப்படுகின்றன. மோப்பநாயின்மூலமும்சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முகமாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். அதனை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

பொதிகளுடன் வருபவர்களிடமும் சந்தேகத்திற்கிடமான பேருந்துகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்புலத்திலேயே புளியங்குளம், ஓமந்தையை அண்மித்த பகுதியில் காலை 7.30 மணியில் இருந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

# நந்திக்கடல் அபிவிருத்தி; தேவானந்தா நடவடிக்கை

நந்திக்கடல் உட்பட வன்னிப் பிரதேசகளப்புக்களைஅபிவிருத்தி செய்து நன்னீர் மீன்வளர்ப்பிற்கு ஏதுவான சூழலை எற்படுத்துவன் மூலம் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீவிர கவனம் செலுத்தி வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக நந்திக்கடலில் தேங்கிக் கிடக்கும் கழிவுளை அகற்றுவதற்கும் மணல் திட்டுக்களை அப்புறப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சரினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சிற்கு வெள்ளியன்று அழைக்கப்பட்டவனவள ஜீவராசிகள் திணைக்களம்உட்பட்ட அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்குறிப்பிட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக பராமரிக்கப்படாமல் இருக்கின்ற நந்திக் கடல்பிரதேசத்தில்பெருந்தொகையானகழிவுப்பொருட்கள்தேங்கிக் கிடக்கிறன எனவும் சுனாமியின் போது கரையொதுங்கிய மணல் திட்டுக்களினால் நந்திக்கடலின் ஆழம் குறைந்துள்ளமையினாலும் நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டிருப்பதாக அந்தத் தொழிலை வாழ்வாதாரமாக நம்பியிருக்கின்ற பிரதேச மக்களினால் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிநந்திக்கடல் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான மதிப்பீடுகள் மற்றும் சட்ட நடைமுறைதொடர்பான அனுமதிகளை உடனடியாக பெற்று அபிவிருத்தி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தரப்பின் பிரதான கட்சியான கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடப் போகின்றவர்கள் யார், வெட்டிவிடப்படப் போகின்றவர்கள் யார் என்பது குறித்துத்தான் பலரும் பேசிக்கொள்கின்றார்கள்.

அதிலும் இப்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஈ.சரவணபவனுக்கு வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வலது கரமுமான சுமந்திரன் கடும் நிலைப்பாடு எடுத்திருக்கின்றமைதான் தமிழர் தரப்பில்அரசியல்பேசும்வெறும் வாய்களுக்கு மெல்லுவதற்குக் கிடைத்த அவல்.

இந்த விடயத்தில் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பவர்களில் முக்கியமானவர்கள் இருவர். ஒருவர் சம்பந்தன், மற்றவர் மாவை சேனாதிராசா.

இந்த இருவருக்கும் சுமந்திரன் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு தூரம் சரவணபவனும் முக்கியமானவர்.

சம்பந்தனுக்கு சுமந்திரன் எவ்வளவு நெருக்கமோ அதிலும் விடக் கூட நெருக்கமானவர் சரா. அவரின் உறவினரும் கூட. சம்பந்தன் யாழ்ப்பாணம் வந்தால் எப்போதும் சரா வீட்டில்தான் ஜாகை.

அதேபோலத்தான் மாவைக்கும் இன்னோரன்ன காரணங்களினால் சராவும் அதிகம் தேவைப்படுகின்றார். அதைப் பிறகு ஒரு சந்தர்ப்பத்தில விலாவாரியாகப் பார்க்கலாம்.

சம்பந்தனுக்கும் மாவைக்கும் சட்டத் தேவைக்கு சுமந்திரன் என்றால் ஊடகப் பிரசாரத்துக்கு சரா.

ஆகவே, சுமந்திரன் – சரா இழுபறி'சபாஷ் சரியான போட்டி!' – 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்தில் வரும் பி.எஸ்.வீரப்பாவின் புகழ்பூத்த வசனம் மாதிரி.

இதிலே இன்னொரு விடயமும் உள்ளது. சுமந்திரன், சரா இரண்டு பேருமே கடந்த பத்து வருடங்களாக – 2010 ஏப்ரல் முதல் – எம்.பிக்கள்.

சரா இரண்டு தடவைகள் யாழ். தேர்தல் மாவட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என அறிவிக்கப்பட்டவர்.

சுமந்திரன் ஒரு தடவைதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என அறிவிக்கப்பட்டவர். மற்றொரு தடவை தேசியப் பட்டியல் மூலம் எம்.பியானவர்.

அவரது அரசியல் பிரவேசம் நியமன எம்.பியாகத்தான் வந்தது. ஆனால் இவரது அரசியல் பிரவேசம் நேரடித் தேர்தல் மூலம் கிடைத்தது.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் 'காலைக்கதிர்' வாசகரான வெளிநாட்டு அன்பர் ஒருவர் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

*"சுமந்திரன் அப்படித் தமது சக எம்.பி. ஒருவருக்கு இம்முறை 'சீற்' கொடுக்கக்கூடாது என்று கூறியிருக்கமாட்டார். நீங்கள்தான் இல்லாத விடயத்தை செய்தியாக்கி இருவரையும் கொழுவி வைக்கின்றீர்கள்!"* – என்று அப்பட்டமாகக் கூறினார்.

அவரது குற்றச்சாட்டுக்கு அளித்த பதிலை இன்று வாசகர்களுடன் பகிர விரும்புகிறேன்.

*"இந்தப் பத்தியில் அந்த விடயம் வெளியாகி அடுத்த நாள் ஒரு செய்தி தொடர்பில் சுமந்திரனுடன் தொடர்பு கொண்டேன். எனது பத்தியில் வந்த ஒரு தகவலை மட்டுமே அவர் மறுத்தார். 'பத்திரிகை உரிமையாளர்களுடனான ஜனாதிபதி கோட்டாபயவின் சந்திப்புக்கு சரா எம்.பி. சென்றமை தவறானது என சுமந்திரன் கூறியமை அபத்தமானது' என நான் எழுதியிருப்பதை மட்டுமே சுமந்திரன் மறுத்தார். 'நான் சரா எம்.பி. ஜனாதிபதி கோட்டாபயவின் சந்திப்புக்குச் சென்றமை தவறு எனக் கூறவில்லை. அந்தச் சந்திப்புக்குப் போன இடத்தில் தம்முடைய வேறு நிறுவனத்துக்கு வரிச் சலுகை வழங்கும்படி அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்தமைதான் தவறு என்றேன். அது குறித்து நிதி அமைச்சரிடம் பேசுங்கள் என்று ஜனாதிபதி கூறியதும் உடனடியாக நிதி அமைச்சரான பிரதமருடன் தொடர்பு கொள்ள அவர் முயன்றமையும்தான் தவறு எனக் கூறினேன்' – என்று தன்னிலை விளக்கம் தந்தார் சுமந்திரன்."*

– இப்படி அந்த வாசக நண்பருக்கு அன்று பதில் தந்தேன்.

இதனை ஒட்டி நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் ஒரு பொது நிகழ்வில் ஓர் உரையாடல் நடந்தது.

சுமந்திரனின் கருத்துக் குறித்து தமது சக நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தனுடன் உரையாடினார் சரா எம்.பி.

*"இப்போதுதான் பூனைக்கு மணி கட்டப்பட்டிருக்கின்றது. இனிப்பாருங்கள்!"* – என்று ஏதோ சாதித்தமை போன்று திருப்தி தெரிவித்தாராம் சரா எம்.பி.

'ஹா ஹ் ஹா' என்று சிரித்த சித்தார்த்தன் *"இதில் யார் பூனை? எது மணி? கட்டியவர் யார்?"* என்று ஒரு கேள்வி விடுத்தார்.

சரா எம்.பி. என்ன பதில் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை.

எனது கணிப்பில் பூனை சுமந்திரன், இருக்கும் எம்.பிக்களுக்கு போட்டியிட ஆசனம் கொடுப்பதில்லை என்பன போன்ற குழப்பங்களை ஏற்படுத்துகின்றமை பற்றிய தகவல் மணி, அதைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியமை மூலம் பூனையின் கழுத்தில மணியைக் கட்டியிருப்பவர்கள் எம்மைப் போன்ற ஊடவியலாளர்கள்.

என் கருத்து சரியா வாசகர்களே! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

பூனைக்கு மணி கட்டுவது அதன் தொல்லைகளிலிருந்து எலிகளைக் காப்பாற்றுவதற்கு.

அப்படி என்றால், இங்கு சுமந்திரன் பூனையாகும் போது எலிகள் யார்....?

அதை வாசகர்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

– மின்னல்–

# விசர் நாய்க் கடிக்கு இலக்கான பெண் தடுப்பூசி போடத் தவறியமையால் சாவு

## கோப்பாய் மத்தியில் பரிதாபச் சம்பவம்

விசர் நாய் கடிக்கு இலக்கான குடும்பப்பெண் தொடர் சிகிச்சை மேற்கொள்ளாமை காரணமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த அன்ரனி மாலதி (வயது40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

கோப்பாய் பகுதியில் வசித்து வந்த மேற்படி குடும்பப் பெண்ணிற்கு இரண்டு மாதத்திற்கு முன்னர் விசர்நாய் கடித்துள்ளது.அவ்வாறு கடித்த நாயை அயலவர்கள் அடித்துக் கொன்றுள்ளனர். விசர் நாய்க் கடிக்கு உள்ளான மேற்படி பெண் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் மருந்து எடுத்தமையுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடனடியாகவே சென்று தடுப்பு ஊசி போட்டுள்ளார்.

அங்கு வைத்தியசாலையில் மிகுதியாக இரண்டு ஊசிகள் போடவேண்டும் என்று கூறி திகதியும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். எனினும் ஊசி போடப் பயம் அடைந்த நிலையில் தடுப்பூசி போடாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார். இந்நிலையில் வெள்ளியன்று சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அங்கு மருத்துவர்களிடம் தனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு விசர் நாய் கடித்ததாகவும் மிகுதி தடுப்பூசி போடப்பட வேண்டிய போதிலும் தாம் அதனைப் பயத்தில் போடவில்லை என்றும் கூறியுள்ளார். உடனடியாக அவருக்கு அதற்கான சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இந்த இறப்புத் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# நீண்ட கால சைக்கிள் திருடன் நேற்று யாழ் நகரில் சிக்கினான்

## பத்து சைக்கிள்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாணம் நகரில் நீண்ட காலமாகத் துவிச்சக்கர வண்டிகளைத் திருடி வந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:–

யாழ்ப்பானம் நகர்ப்பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகள் தொடர்ச்சியாகத் திருடப்பட்டு வந்தன. பாதிக்கப்பட்ட பலர் இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் பொலிஸார் துவிச்சக்கரவண்டித் திருடர்களை பிடிப்பதற்காக சில நாள்களாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் நேற்றுத் துவிச்சக்கர வண்டிகளைத் திருடும் நபர் எனச் சந்தேகிக்கப்படும் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 10 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தச்ச்சந்தேக நபரிடமிருந்து எட்டு பெண்களுக்கான துவிச்சக்கரவண்டிகளும் இரண்டு ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிகளுமாக 10 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயற்பாட்டுக்குழுவை நியமிக்குமாறு சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்று இலங்கைக்குள் பரவாமல் இருப்பதற்கும், அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் பொறுப்புவாய்ந்த குழுவினர் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரியல் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, சுகாதார செயலாளர் ஹதுனி ஜயவர்தன, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் ஜயசிங்க, மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் சில்வா உள்ளிட்ட விசேட வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இலங்கை இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக பிரிகேடியர் வைத்தியர் கிருாந்த பெர்னாண்டோ, விமான சேவை நிறுவனத் தலைவர் ஜெனரல் பி.எச்.சந்திரசிறி மற்றும் குடிவரவு குடியகல்வு நிர்வாகப் பிரிவினரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இக்குழுவினர் நேற்று மாலை சுகாதார அமைச்சர் தலைமையில் சுகாதார அமைச்சில் முக்கிய பேச்சுக்களை முன்னெடுத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் குழுவின் ஆலோசனைகளை மற்றும் செயற்றிட்டங்களை தெளிவுப்படுத்தும் விதமான விசேட கலந்துரையாடல் நாளை காலை 11 மணியளவில் சுகாதார அமைச்சில் விசேட வைத்தியர் அனில் ஜயசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கோட்டா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

நாடாளுமன்றமொன்றில் பெரும்பான்மையான உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ள பேரம் பேசுதலை நாம் மேற்கொண்டால், நிச்சயமாகப் பலமானதொரு அரசை எம்மால் அமைக்க முடியாமல் போய் விடும்.

இறுதியில் வில்பத்துவை சுத்தம்செய்தவர்கள் செய்த அரசைப் போல்தான் அது காணப்படும். இதுதான் உண்மையாகும். எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பலமான தொரு அரசை நாம் அமைக்கவேண்டும்.

இதற்கான அதிகாரம் மக்களிடம்தான் உள்ளது. இதனை மேற்கொள்ள நாம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும்.

19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக பலமானதொரு நாடாளுமன்றம் இருந்தால் மட்டுமே, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இல்லையென்றால், பின்நோக்கித்தான் நாம் நகரவேண்டியேற்படும்.

தற்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நல்லவர் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மோசமானவர் என்றும் கூறுகிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது மஹிந்த நல்லவர் கோட்டா மோசமானவர் என்று கூறினார்கள். அமெரிக்க கடவுச்சீட்டை வைத்திருந்தமைக்காக ஜனாதிபதி கோட்டாபயவை தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக விமர்சித்தார்.

இன்று இதுதொடர்பாக எல்லோரும் எவரும் கருத்து தெரிவிப்பதில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்றாகத் தெரியும்.

இதனால்தான் இவ்வாறான கதைகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருப்பாராயின், அந்த அரசின் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவே இருக்க வேண்டும் என மக்கள் தீர்மானித்துவிட்டார்கள்.

இதனை ஐக்கிய தேசியக் கட்சியினர் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்போது, கோட்டாவும் மஹிந்தவும் ஒருவருக்கொருவர் கோபமாக உள்ளார்கள் என்று கூறி வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவே இவர்கள் முற்படுகிறார்கள்.

ஆனால், இவர்கள் இருவரையும் பிரிப்பது ஒன்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவ்வளவு எளிதான விடயமல்ல. சஜித் பிரேமதாஸவின் அப்பாவும் அந்தக் காலத்தில் இந்த செயற்பாட்டை மேற்கொண்டு தோல்வியடைந்தார். எனவே, சஜித்பிரேமதாஸவுக்கும் ஒருபோதும் இவர்களுக்குள் பிளவினை ஏற்படுத்த முடியாது– என்றார். (ஐ)

## சர்ச்சைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டுள்ளது.

இதன்போது குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை மீண்டும் பிரதித் தலைவராக நியமிப்பதற்கு கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பதவிகள் தொடர்பான தெரிவுகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன.

முரண்பாடுகள் இன்றி தலைமைத்துவம் இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளைக் கட்சி முன்னெடுத்து வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்ட கிளை உறுப்பினர்களினதும் கட்சி ஆதரவாளர்களினதும் கருத்துக்கள் ஆராயப்பட்டன என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைத் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கூறினார்.

அதனையடுத்து, கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மை கட்சி என்ற வகையில், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுடன் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக தன்னுடன் கலந்துரையாடவுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தனக்கு தெரிவித்தார் என்றும் எனினும், உத்தியோகபூர்வமாக அறிவித்தல் இதுவரை கிடைக்கவில்லை என்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ஐ)

## பிரதேச சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கையில் பலத்த காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாத நபர்கள் இவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## இலங்கைக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற குத்துச்சண்டை போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த ஏழு வீரர்கள் கலந்துகொண்டு ஏழு பதக்கங்களை இலங்கைக்கு பெற்றுக்கொடுத்துள்ளனர்.

பாகிஸ்தானின் லாகூரில் அமைந்துள்ள கடாபி விளையாட்டு மைதானத்தின் உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த 23ஆம் திகதி தொடக்கம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

சர்வதேச கிக் பொக்சிங் குத்துச்சண்டைப் போட்டியில் கலந்து கொண்ட வடக்கு மாகாண குத்துச்சண்டை வீரர்கள் இலங்கைக்கு நான்கு தங்கப் பதக்கங்களையும் மூன்று வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண கிக்பொக்சிங் குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளரும் வடக்கு மாகாண ஏழாம் அறிவு தற்காப்புகலை சங்கத்தின் தலைவருமான எஸ்.நந்தகுமாரினால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களே இவ்வாறு பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சஞ்சயன் (18), பி.ராகுல் (17), வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவன் கெ.நிரோஜன் (16) மற்றும் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஆர்.கெ. கெவின் (11) ஆகியோர் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

ரி.நாகராஜா (18), வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை சேர்ந்த வி.வசீகரன் (17) மற்றும் வவுனியா காமினி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சிறிதர்சன் (18) வெள்ளிப் பதக்கத்தையும் வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

சர்வதேச குத்துச் சண்டை பயிற்றுவிப்பாளரும் பிரான்ஸ் சவாட் குத்துச்சண்டை அமைப்பின் தலைவருமான சி.பூ.பிரசாத் விக்ரமசிங்க தலைமையில் இலங்கையில் இருந்து வடமாகாணத்தின் வவுனியாவை சேர்ந்த ஏழு வீரர்களும் தென்னிலங்கையைச் சேர்ந்த பதினான்கு வீரர்களுமாக 21 வீரர்கள் இலங்கையைப் பிரதிபலித்து பாக்கிஸ்தானுக்கு பயணமாகியிருந்தனர்.

இவ்வீரர்கள் இலங்கைக்கு 11 தங்கப் பதக்கங்களையும் 8 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இதன்போது, தெற்காசிய வூசு கூட்டமைப்பின் தலைவரும் பாகிஸ்தானின் ஒருங்கிணைப்பாளருமான மாலிக் இப்திகார் உள்ளிட்ட குழுவினரின் தலைமையில் பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டையில் வெற்றிவாகை சூடிய எமது வீரர்கள், இன்று மாலை 4 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவர் இரா சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது தேர்தல் கண்காணிப்பின் இறுதி அறிக்கையைக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் கையளித்தனர்.

இடம்பெறப்போகும் பொதுத் தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பு அவசியத்தையும் இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டினார். (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பார்க்கின்றனரென நாடாளுமன்ற உறுப் பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரச்சினையே தலைமைத்துவப் பதவியாகும்.

கட்சியிலுள்ள பெரும்பான்மையினர் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டுமென்ற கருத்தையே முன்வைத்து வருகின்றனர்.

அத்தகைய எண்ணத்தில் தான் நாமும் இருக்கின்றோம். அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தல், மக்களின் எதிர்பார்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அவதானிக்கும்போது கட்டாயம் கட்சி தலைமையில் மாற்றம் அவசியம் என்பது உறுதியாகின்றது.

சஜித்துக்கு அந்தத் தலைமை பதவியை வழங்குவது தொடர்பானயோசனையும் முன்வைக்கப்பட்டு இருக்கின்றது–என்றார். (ஐ)

## புதிய அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டணியாகத் தேர்தலுக்கு முகம்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு நேற்று கொழும்பு கண்காட்சி மண்டபத்தில் இடம் பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாங்கள் ஒருபோது அரசின் பக்கம் செல்லமாட்டோம். ஆனால் பொதுத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெறவேண்டும். அதற்காக அமைக்கும் கூட்டணியில் ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான கட்சியாக இருக்கப்போகின்றது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் தலைமைத்துவப் பிரச்சினையை அவர்கள் விரைவாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் பல்வேறு பொய் வாக்குறுதிகளை தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசு தற்போது ஒன்றும் செய்ய முடியாமல் நிலை தடுமாறிக்கொண்டிருக்கின்றது.

சிங்கள மக்களை ஏமாற்றி பொய் வாக்குறுதிகளை வழங்கியே இந்த அரசு அதிகாரத்துக்கு வந்தது. ஆனால் இவர்களின் சுயரூபம் வெளிவந்துள்ளது– என்றார். (ஐ)

## கணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொல்லங்கலட்டி தெல்லிப்பளை பகுதியைச் சேர்ந்த அய்யாதுரை சரஸ்வதி (வயது 72) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மேற்படி குடும்பத்தின் குடும்பத் தலைவரான ஐயாத்துரை என்பவர் கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்துள்ளார்

அந்தச் செய்தியை அவரது மனைவியான ஐயாத்துரை சரஸ்வதி என்பவருக்குத் தெரிவிக் கப்பட்டுள்ளது. தனது கணவன் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அந்தக் குடும்ப பெண் மயக்கம் அடைந்துள்ளார்

மயக்கமடைந்து விழுந்த குறித்த குடும்பப் பெண்ணை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இறப்புத் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## மிக விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாடல், உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல் பதிவுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுப்பிரிவுக்கு அரசு எவ்வித ஆலோசனைகளையும் வழங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதித்துறையின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ளும் விதத்தில் தவறுகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

மத்திய வங்கியின் பிணை முறி கொடுக்கல், வாங்கல் விநியோகத்தில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன என்பதை பொதுஜன பெரமுனவினரே ஆரம்பத்தில் பகிரங்கப்படுத்தினோம்.

தற்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலும் முறிகள் கொடுக்கல், வாங்கலில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மத்தியவங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உரிய தெளிவுப்படுத்தலினை விரைவில் ஊடகங்கள் ஊடாக முன்னெடுப்பார்.

சமூக வலைத்தளங்களில் கடந்த வாரங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு மக்களின் வரவேற்பினை பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல் பதிவுகள் தற்போது முழு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் குரல் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் வெளியிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசு செயற்படுவதாக குறிப்பிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது– என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சஜித் பொறுத்தால் பூமியாள்வார்!

**ஐக்கிய தேசியக் கட்சியின் உள்வீட்டுப் பூசல் உச்சத்தை எட்டியிருக்கும் நிலையில் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடுகின்றது.**

**நீண்ட காலம் இழுபடும் கட்சியின் தலைமைத்துவப் பிரச்சினைக்கு இன்றைய கூட்டத்தில் தீர்வு வருமா என்று பலதரப்பினரும் எதிர்பார்க்கின்ற போதிலும், அதற்கு சாத்தியமேயில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.**

**எழுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இப்படித் தலைமைத்துவப் போட்டிகள் அவ்வப்போது வந்து போய் உள்ளனதான்.**

**எனினும், பெரும் அரசியல் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் அக்கட்சிக்கு இப்படிக் கால் நூற்றாண்டுக்கு மேல் தலைமை வகித்தவர்கள் யாரும் இலர். அந்தப் பெருமையும் – இப்படி கால்நூற்றாண்டில் அதிக காலத்தை கட்சியை எதிரணியில் வைத்திருக்கும் சிறுமையும் – ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டும்தான் உண்டு.**

**ஆனால், இதுவரை இருந்த ஐ.தே.கட்சித் தலைவர்கள் அனைவரிலும் இருந்தும் ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தில் வித்தியாசமானவராக இருக்கின்றார். அதற்காக விதந்துரைக்கப்பட வேண்டியவராக – மெச்சப்பட வேண்டியவராக – இருக்கின்றார்.**

**கட்சிக்குள் தன்னை எதிர்ப்பவர்களைக் கூட – தனக்குத் துரோகிகளாக மாறியவர்களைக் கூட – கட்சியை விட்டு வெளியேற்றாமல் அரவணைத்து வைத்திருக்கும் அவரின் பண்பியல்புதான் அது.**

**ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் அவருக்கு அடுத்த மட்டத்தில் கட்சித் தலைமையின் வரிசையில் இருந்தவர் இப்போதைய சஜித் பிரேமதாஸவின் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸா.**

**அப்போது கட்சித் தலைவர் ஜெயவர்த்தனவுக்கும், பிரதித் தலைவர் ரணசிங்க பிரேமதாஸவுக்கும் முரண்பாடு கடுமையாக நீடித்தது.**

**ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மருமகன் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரேமதாஸவின் மகன் சஜித்துக்கும் இப்போது இழுபறிகள், தலைமைத்துவ நெருக்கடிகள் இருக்கின்றமை போல அப்போது ஜே.ஆருக்கும், ரணசிங்க பிரேமதாஸவுக்கும் முரண்பாடுகள் முற்றியிருக்கின்றன.**

**அப்போது, ரணசிங்க பிரேமதாஸவுக்கு அடுத்த கட்டத் தலைவர்களாக இருந்த லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா போன்றோர் கட்சித் தலைவர் ஜே. ஆருக்குப் பக்கபலமாக நின்றனர்.**

**எண்பதுகளின் கடைசியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடமிருந்து கட்சித் தலைமையும் அதிகாரமும் பிரேமதாஸவிடம் கைம்மாறியதும், லலித், காமினி எல்லோரும் பழிவாங்கப்பட்டனர். கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டனர்.**

**ஆனால், ரணில் கட்சித் தலைமைக்கு வந்த பின்னர் இற்றை வரை யாரையும் கட்சியை விட்டு வெளியே துரத்தினார் அல்லர்.**

**தம்மோடு முரண்பட்டு, தம்மை எதிர்த்து நின்றோரைக் கூட அவர் அரவணைத்தே நின்றார்; நிற்கின்றார்.**

**தமக்கு எதிரான போராட்டத்தில் தீவிரமாக இருக்கும் சஜித் பிரேமதாஸவைக் கட்சியை விட்டு அகற்றும் எந்த முயற்சியிலும் அவர் ஈடுபட்டவரல்லர்.**

**மாறாக, அவர் துறந்த கட்சியின் பிரதித் தலைவர் பதவியைக் கூட அவருக்கே திரும்ப வழங்கும் முழு முனைப்பில் இருக்கின்றார் ரணில்.**

**இந்தப் பின்புலத்தில், ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கட்சித் தலைமையைப் பகிரங்கமாக அச்சுறுத்தி, அழுத்தி பறித்தெடுக்கும் தமது முயற்சியில் சஜித் வெற்றி பெறுவாராயின் அதன் பின்னர் என்ன நடக்கும்?**

**ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்லர், அவரது அணியைச் சேர்ந்த அனைவருமே ஓரங்கட்டப்படுவர். ரணிலின் விருப்புக்குரிய அகிலவிராஜ் காரியவசம், காமினி திஸ நாயக்காவின் மகன் நவீன் திஸநாயக்கா என ரணிலின் ஆள்கள் அனைவரும் ஓரங்கட்டப்படுவர்.**

**இதை ஊகித்துத்தான் கட்சித் தலைமையை சஜித்திடம் வழங்காமல் பொதுத் தேர்தல் முடியும் வரை விடயத்தை இழுத்தடிப்பதற்கு ரணில் விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது.**

**அதேசமயம், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியே போய் புதிய கட்சி தொடங்கும் எண்ணம் ஏதும் சஜித் பிரேமதாஸவுக்கு அடியோடு கிடையாது என அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.**

**தனது தந்தையாரும் சேர்ந்து வளர்த்த கட்சியை விட்டு விலகும் எண்ணம் சஜித்துக்கு அடியோடு கிடையாது என்பதும் இப்போது உறுதியாகி வருகின்றது.**

**புதிய கட்சியையும், புதிய கூட்டமைப்பையும் உருவாக்கும்படி அவர் அணியினரும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் வழங்கிய ஊக்கத்துக்கு – உற்சாகத்துக்கு – ஆரம்பத்தில் தலையாட்டிய சஜித் தரப்பு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கி விட்டது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.**

**எந்தக் காலத்திலும் கட்சியை விட்டு வெளியேறுவதில்லை என்பதில் அவர் தெளிவாக இருக்கின்றார். 'பழம் பழுத்து அவர் மடியில் விழும்' என்பது நிச்சயம். ஆனால் அந்தப் பழம் பழுக்க முன்னர் அதை அடித்து அவர் விழுத்தி நாசமாக்கி விடுவாரோ என்பதே இன்றைய அச்சம்.**

**தலைமைத்துவ விடயத்தில் பொறுத்திருந்தால் அவர் பூமி ஆள்வார். அதை விடுத்து அதனை அடித்துப் பறிக்க அவர் முயன்றால் அது எட்டாப் பழமாகிவிடும். இதுதான் இன்றைய நிலைமை.**

# கொரோனா வைரஸ் தொடர்பாக சுகாதார அமைச்சு விழிப்பூட்டல்

கொழும்பு, ஜன. 27

சீனாவில் பரவி வரும் புதிய கொரோனா வைரஸ் தொடர்பில் நாட்டில் பொது மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்காசியாவில் பல நாடுகளில் இந்த வைரஸ் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காய்ச்சல், இருமல், தடிமல், சுவாசிப்பதில் சிரமம், இயற்கை கழிவு நீராக வெளியேறுதல். தலைவலி, தொண்டையில் வலி , உடம்பு வலி, மூக்கில் நீர் வடிதல் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

இவை ஏற்படும் பட்சத்தில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

வேகமாக பரவக்கூடிய இந்த புதிய கொரோனா வைரசினால் பாதிப்பு ஏற்பட்டால் நிமோனியா காய்ச்சல் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு உள்ளிட்ட மோசமான நிலமை ஏற்படக்கூடும். புதிய வைரசின் தாக்கத்தை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் சகாதார அதிகாரிகள் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

கைகளைச் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் அல்லது விசக்கிருமிகளை அழிக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்துதல், இருமல் மற்றும் தும்மலின் போது கைக்குட்டையை பயன்படுத்துதல், பயன்படுத்திய ஸ்ரிசுவை உரிய கழிவுத் தொட்டியில் போடுதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இருமல் அல்லது தும்மலின் போது கைக்குட்டை அல்லது ரிசுவைப் பயன்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் அருகில் உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றை மேற்கொள்ள வேண்டும். தும்மும்போது கைகளை பயன்படுத்தக்கூடாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய வைரஸின் தாக்கத்தை தவிர்க்க வேண்டுமாயின் காய்ச்சல் மற்றும் மூக்கில் நீர் வடியும் நபர்களுடன் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இதேபோன்று உணவு வகைகளை தயாரிக்கும் போது முட்டை, இறைச்சி போன்றவற்றை உரிய முறையில் சமைப்பது மிகவும் முக்கியமாதாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கால்நடைப் பண்ணைகளில் பணியாற்றும் போது பாதுகாப்பாக செயற்படுமாறு சுகாதார அமைச்சு அத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினருக்கு அறிவித்துள்ளது.

குறிப்பாக இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவோர் கையுறை, முக கவசம் போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ் மக்கள் அபிவிருத்தி மேம்பாட்டு மன்றம் யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்று அங்குரார்ப்பணம்



யாழ்ப்பாணம், ஜன. 27

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் தமிழ் மக்கள் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் தலமையிலேயே இந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த கலந்துரையாடலில் வைத்தே இந்த மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு – கிழக்கில் உள்ள துறைசார் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பொருளியலாளர்கள், புலமையாளர்கள், கல்வியாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஒருபுறம் நடைபெறும் அதே வேளை, யுத்தத்தினால் மிக மோசமாகப் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு – கிழக்கின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றைச் சமாந்தரமாக முன் னெடுத்துச் செல்வதற்கு சிவில் சமூகத்தின் காத்திரமான பங்களிப்பு அவசியம் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்ததன் பின்னணி யிலேயே இந்த கூட்டம் நடைபெற்றுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள போதிலும் வடக்கு – கிழக்கில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும் வகையில் இன்னமும் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாக, இளையோர் வலுவூட்டல், வறுமை ஒழிப்பு, விவசாயம், மீன்பிடி, திறன் விருத்தி, பொருளாதார வலுவூட்டல், கல்வி, சுற்றாடல், நல் ஆட்சி, சுகாதாரம், விஞ்ஞானமும் புதுமை படைத்தலும், தகவல் தொழில்நுட்பம், சட்ட உரிமைகள், தமிழர் மரபு, பல்துறை ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் துறைசார் வல்லுநர்களை அடையாளம் கண்டு வளங்களைச் சரியான முறையில் ஒன்றுதிரட்டி சரியான திசையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வதற்காக துடிப்பும் செயற்திறனும் மிக்க சிவில் சமூகக் குழு ஒன்றின் தேவை இதற்கு அவசியமாக இருக்கின்றது.

இந்த அவசியத்தை கவனத்தில் எடுத்தே எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை ஆராயும் பொருட்டு நேற்றைய கூட்டம் நடைபெற்றிருந்தது.

அறிவு, ஆய்வு மற்றும் செயற்திட்டங்களின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தின் ஊடாகவும் மற்றும் வெளிநாடுகளில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் வளங்களை பயன்படுத்தி தமிழர்களின் செழிப்பு மற்றும் வலுவூட்டலுக்காக மன்றம் ஒன்றை ஸ்தாபித்து செயற்படுவது என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ – 07)

**நாளை 28.01.2020 – செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: சதயம் மு.ப 9.12 வரை
திதி : திருதியை காலை 8.02 வரை

இராகுகாலம் : 3.36 – 5.06
சுப நேரம் : 11.06 – 12.36

# பொலிஸார், இராணுவம் வவுனியாவில் சோதனை



வவுனியா, ஜன. 27

வவுனியா – ஏ9 வீதியில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வவுனியா புளியங்குளம், ஓமந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு அதிகளவான பொலிஸாரும் இராணுவமும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சந்தேகத்துக்கிடமாக வீதியால் செல்லும் பஸ்கள் மற்றும் வாகனங்களும் நிறுத்தி சோதனை செய்யப்பட்டிருந்ததுடன், மோப்ப நாயின் மூலமும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் பாதுகாப்பை பலப்படுத்தும் முகமாக ஜனாதிபதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கூறியதையடுத்து, பொதிகளுடன் வருபவர்களிடமும் சந்தேகத்திற்கிடமான பஸ்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே நேற்று புளியங்குளம், ஓமந்தையை அண்மித்த பகுதியில் காலை 7.30 மணியில் இருந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை **காலை 08.00 மணி யிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**வவுனியா பிரதேசத்தில் -**

மூன்றுமுறிப்பிலிருந்து பூஓயா வரை, Gowloom Garments ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம் யோசப் படை முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், Air Point Joint Service Army Camp, BOO ஓயா, · Recbo North மதவுவைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

தரவன்கோட்டை, சாந்திபுரம், South bar, தள்ளாடி, தள்ளாடி படை முகாம், மாந்தை உப்பு தொழிற்சாலை, ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# திருடர்களுக்கு நாட்டில் தண்டனை கிடைக்காது

## கூறுகிறார் ஹிருணிகா



கொழும்பு, ஜன. 27

நாட்டில் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளில், எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும், திருடர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், பிரதான அரசியல் கட்சிகள் இரண்டினதும் தலைவர்கள் நல்ல நண்பர்கள், ஆகவே இவர்கள் ஆட்சிக்கு வந்தால், திருடர்கள், கொலையாளிகள் போன்றோருக்கு ஒருபோதும் தண்டனை வழங்கப்பட மாட்டாது – என்றார். (ஐ)

# மட்டு. அரச அதிபராக புதியவர்

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு மாவட்ட புதிய அரச அதிபராக திருமதி கலாமதி பத்மராஜா, உத்தியோகபூர்வமாக இன்று தனது கடமையைப் பொறுப்பேற்கின்றார்.

இலங்கையிலுள்ள 10 மாவட்டங்களுக்கு அரச அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரச அதிபராக திருமதி கலாமதி பத்மராஜா, தனது நியமனத்தை, பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை பெற்றார்.

இவர், கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபராகவும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

பின்னர், கிழக்கு மாகாண சபையில் பிரதிப் பிரதம செயலாளராகவும், கிழக்கு மாகாண சபையின் பேரவை செயலாளராகவும் பணியாற்றினார்.

மட்டக்களப்பு நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார். (ஐ)

# கொக்குத்தொடுவாய் ம.வியின் இல்ல அலங்காரங்கள் இவை





முல்லைத்தீவு, ஜன. 27

கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டியில் இல்லங்கள் சோதனை அனைவரையும் கவர்ந்திருந்தன.

இந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் பனை ஓலையால் அலங்கரிக்கப்பட்ட மயில் தோகை விரித்தாடும் காட்சி,தென்னை ஓலை யால் அமைக்கப்பட்ட இலவச அம்புலன்ஸ் சேவை வண்டியின் காட்சி என்பன அனைவரையும் கவர்ந்திருந்தன. (ஐ)

# முல்லையில் 6,000 ஏக்கரில் நிலக் கடலைச் செய்கை

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஆண்டுதோறும் 6,000 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, முல்லைத்தீவு மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பூ.உலகநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் – பெரும்போகத்தில் 3,200 ஏக்கரிலும் சிறுபோகத்தில் 2,000 ஏக்கரிலும் இடைப்போகத்தில் 1,000 ஏக்கரிலும் நிலக்கடலைச் செய்கைப் பண்ணப்பட்டு வருகிறது.

உப உணவுப் பயிர்ச் செய்கைகளான கௌபி, பயறு, எள்ளு, நிலக்கடலை என்பவற்றில் விவசாயிகள் கூடுதலாக ஈடுபட வேண்டும். விவசாயத் திணைக்களத்தால் நடமாடும் விதை விற்பனை செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மல்லாவி விவசாயப் பயிற்சி நிலையத்திலும் புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்திலும் ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும் இந்த நல்லின விதைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, மாவட்டத்தில், குரங்குகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பத்து வாயு துப்பாக்கிகளை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன – என்றார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# இந்தியாவின் 71 ஆவது குடியரசுத் தினம் நேற்றுக் கோலாகலமான நிகழ்வுகளுடன்





இந்தியாவின் 71 ஆவது குடியரசுத் தினத்தை முன்னிட்டு டெல்லி ராஜபாதையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தேசியக் கொடி ஏற்றி முப்படைகளின் அணிவகுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்த விழாவில் குடியரசு தின சிறப்பு விருந்தினரான பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சனரோ பங்கேற்றார். இதேபோன்று பிரதமர் மோடி, மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பிற துறைகளைச் சார்ந்த மத்திய அமைச்சர்கள், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், அவரது மனைவி குர்சரண் கவுர், தலைமை நீதியரசர் போப்டே மற்றும் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இதன்பின் நடந்த இராணுவம், விமானம் மற்றும் கடற்படை ஆகிய முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் ஏற்று கொண்டார். இந்த அணிவகுப்பில் இந்திய ராணுவத்தின் டி-90 பீஷ்மா, கே-9 வஜிரா-டி வகை கவச வாகனங்கள் பங்கேற்றன. இலகு வகை ஹெலிக்கொப்டர்கள் வானில் பறந்து சென்று சாகசம் செய்தன. பின்னர் சீக்கிய படைகளின் அணிவகுப்பு, கடற்படையின் வாத்திய குழு அணிவகுப்பு ஆகியன நடைபெற்றன. கடற்படையைச் சேர்ந்த நீண்டதூர ரோந்து விமானம் மற்றும் கொல்கத்தா வகையை சேர்ந்த போர் கப்பல் மற்றும் கல்வாரி வகை நீர்மூழ்கி கப்பல் ஆகியவற்றின் மாதிரிகள் அணிவகுப்பில் கலந்து கொண்டு காட்சிப்படுத்தப்பட்டன.

## தேசியப் போர் நினைவு சின்னத்தில் பிரதமர் மோடி நேற்று மலர் மரியாதை




புதுடெல்லி,ஜன.27

இந்தியாவின் 71 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று டெல்லியில் உள்ள தேசிய போர் நினைவு சின்னத்தில் பணியின் பொழுது உயிரிழந்த வீரர்களுக்கு பிரதமர் மோடி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், இராணுவத் தலைமை தளபதி நாராவனே, கடற்படைதலைமைத் தளபதி கரம்பீர் சிங், விமான படைத் தலைமை தளபதி ஆர்.கே.சிங் பதோரியா ஆகியோர் பங்கு பெற்றனர்.

## குடியரசுத் தின நிகழ்வுகளில் மோடியின் தலைப்பாகைகள்




## சீனாவில் நிர்க்கதி நிலையில் தமிழர்கள்!

பீஜிங்,ஜன.27

கொரோனா வைரஸ் தாக்குதல் எதிரொலியால் சீனாவில் இருக்கும் தமிழர்கள் சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைப்பதாக அவர்கள் கண்ணீர்மல்கத் தெரிவித்துள்ளனர்.

சீனாவை கொரோனா வைரஸ் ஆட்டிப்படைத்து வருகிறது. பலரின் உயிர்களைப் பறித்துள்ள அந்த வைரஸ் அங்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவில் உள்ள ஹுபெய் மாகாணத்தில் உள்ள உகான் நகரில் ஹோட்டல்கள், ஐ.டி.கம்பெனிகளில் சென்னை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, நெல்லை, தஞ்சை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான தமிழர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

தற்போது கொரோனா வைரஸ் தாக்குதல் பீதியால் போதுமான உணவு, தண்ணீர் இன்றி அங்கு தவித்து வரும் அவர்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்ப முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

இதுகுறித்து உகான் நகரில் ஹோட்டலில் பணியாற்றி வரும் தேவகோட்டையை சேர்ந்த மூர்த்தி என்பவர் கண்ணீர்மல்க கூறியவை வருமாறு:-

கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளான உகான் நகரில் தமிழகத்தை சேர்ந்த சுமார் 300இற்கும் மேற்பட்டோர் வசித்து வருகிறார்கள். ஹோட்டல்கள், ஐ.டி.கம்பெனி, கல்வி நிலையங்கள் எனப் பல்வேறு பணிகளைச் செய்து வரும் நாங்கள் 70 பேர் கடந்த சில நாள்களாக வெளியே செல்ல முடியாமல் அறைகளிலேயே முடங்கிக் கிடக்கிறோம்.

மீதம் உள்ளவர்கள் நிலைமை என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஹோட்டல்கள் மூடப்பட்டமையால் உணவு கிடைப்பது இல்லை. இதனால் பசியோடும், பட்டினியோடும் நாள்களைக் கழிக்கிறோம். சொந்த ஊர்களுக்கும் திரும்பமுடியவில்லை என்பது கூடுதல் தலைவலியை ஏற்படுத்துகிறது.



"உரிய மருத்துவ பரிசோதனைகளை செய்து, நோய் தொற்று இல்லை என்பதை உறுதி செய்துவிட்டு எங்களைச் சொந்த ஊர்களுக்கு அனுப்புங்கள். சொந்த ஊர்களுக்கு வெளியே தனியாக அறை எடுத்துக் கொடுங்கள். நாங்கள் அங்கே நோய் தொடர்பான பீதி தணியும் வரையிலும் தங்கி இருக்கிறோம் என்று எங்களுடையை நிலைமையை இந்திய தூதரக அதிகாரிகளிடம் கூறினோம். ஆனால் அவர்கள் எந்த பதிலையும் சொல்லவில்லை.

"ஒவ்வொரு நாளும் மரண வேதனையை அனுபவித்து வருகிறோம். செத்துப் பிழைத்து வருகிறோம். எனவே பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் தமிழர்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் எங்களைப் பத்திரமாக மீட்டு, தமிழகத்துக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" - என்று அவர் கூறினார்.

## 17,000 அடி உயரத்தில் 20 டிகிரி கடுங்குளிரில் இந்திய குடியரசு தினம்



லடாக்,ஜன.27

ஜம்மு மற்றும் காஷ்மீரின் லடாக் பகுதியில் 17 ஆயிரம் அடி உயரத்தில் மைனஸ் (-)20 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் அதிக குளிரையும் பொருட்படுத்திடாமல் தேசிய கொடியுடன் இந்தோ - திபெத் எல்லைப் பொலிஸார் இந்தியக் குடியரசு தினத்தை நேற்றுக் கொண்டாடினர்.

அவர்கள் மூவர்ண கொடியை ஏந்தியபடி பனி படர்ந்த மலையில் வரிசையாக நடந்து சென்று குடியரசு தினக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். பின்பு ஒரே வரிசையில் நின்றபடி 'பாரத் மாதா கி ஜெய்' மற்றும் 'வந்தே மாதரம்' என்ற கோங்களையும் முழங்கினர்.

# வெட்டுக்கிளிகளின் தொல்லையால் கென்யாவில் விவசாயம் பெருநாசம்



கென்யாவில் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கட்டுக்கடங்காத வெட்டுக்கிளிகள் தொல்லை ஏற்பட்டுள்ளது. அவை அளவுகணக்கின்றி பயிர்களை நாசம் செய்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கிழக்கு ஆப்ரிக்க நாடுகளான சோமாலியா மற்றும் எத்தியோப்பியாவிலிருந்து படையெடுத்து வரும் இந்தப் பூச்சிகள், விவசாய நிலங்களை அழித்து, ஏற்கனவே பஞ்சம் வறட்சியால் தவிக்கும் அந்த பிராந்தியத்தை மேலும் அச்சுறுத்தி வருகின்றன.

சராசரியாக மனித விரல் உயரத்திற்கு வளர்ந்திருக்கும் இந்தப் பூச்சிகள், கூட்டம் கூட்டமாக வருவதால் விவசாயிகள் அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் தவித்து வருகின்றனர்.

## தீவிரவாதிகளை பாக். ஒடுக்க சர்வதேச ரீதியில் நெருக்குதல்



சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பான ய்புவீய் இன் நிபந்தனைகளை நிறைவேற்றும்படி பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

உலக நாடுகளிடமிருந்து பெறப்படும் நிதி தீவிரவாத இயக்கங்களுக்கு விநியோகிக்கப்படுவதாக இந்தியா அளித்த முறைப்பாட்டை அடுத்து, தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க அந்த அமைப்பு வலியுறுத்தியிருந்தது. பெய்ஜிங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பாகிஸ்தான் எடுத்த நடவடிக்கைகள் என்ன என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே ய்புவீய் அமைப்பின் நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. நிதி நெருக்கடியால் தவிக்கும் பாகிஸ்தான் தனது பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் உலக நாடுகளின் நிதியைப் பெறவும் சர்வதேச நாடுகளின் வலியுறுத்தல்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## காட்டுத் தீயால் ஆஸி நகரங்களில் லட்சக்கணக்கான வவ்வால்கள்..!





ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் லட்சக்கணக்கான வௌவால்கள் தஞ்சமடைந்துள்ளமையால் பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அந்நாட்டில் பற்றி எரியும் புதர்த் தீயால் பல ஆயிரம் ஏக்கரிலான காடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் வாழ்விடங்களை இழந்துள்ள லட்சக்கணக்கான பழந்தின்னி வௌவால்கள் நகர்புறங்களை நோக்கிப் படையெடுத்துள்ளன. இந்த நிலையில் இங்காம் நகரத்தில் ஹெலிக்கொப்டர் அம்புலன்ஸை மருத்துவமனையில் தரையிறங்கவிடாமல் பல நூற்றுக்கணக்கான வௌவால்கள் அப்பகுதியில் வானில் வட்டமிட்டன.

இரவு நேரங்களில் இந்த வௌவால்கள் மருத்துவமனை, பள்ளிக்கூடங்களில் தஞ்சம் புகுந்துவிடுவதால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## துருக்கி நிலநடுக்கத்தில் உயிரிழப்பு 29 ஆக உயர்வு

### 1,200 இற்கும் அதிகமானோர் காயம்





இஸ்தான்புல்,ஜன.27

துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகின. இடிபாடுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது.

துருக்கி நாடு புவித்தட்டுகள் அடிக்கடி நகருகின்ற இடத்தில் அமைந்துள்ளதால், அவ்வப்போது நில நடுக்கம் ஏற்பட்டு பெருத்த சேதங்களை ஏற்படுத்தி வருகிறது. அங்கு 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர நில நடுக்கத்தில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானமை வரலாற்றுச் சோகமாக அமைந்துள்ளது.

இதற்கிடையே, அங்குள்ள இலாஜிக் மாகாணத்தில் சிவ்ரிஸ் என்ற சிறிய நகரத்தை மையமாக வைத்து வெள்ளி இரவு உள்ளூர் நேரப்படி 8.55 மணிக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.8 புள்ளிகளாக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் தியார் பக்கிர் உள்பட பல நகரங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் குலுங்கின. பல கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகின. நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்நிலையில், துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சேதமான கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. மேலும், ஆயிரத்து இருநூறுக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து 274 முறை நில அதிர்வு ஏற்பட்டதால் மக்கள் அச்சத்தில் உறைந்தனர். தேவைப்பட்டால் இராணுவம் மீட்பு பணியில் இறங்க தயாராக உள்ளது எனஈராணுவ மந்திரி ஹலுசி அகார் தெரிவித்தார். நிலநடுக்கம் பாதித்த பகுதிகளுக்கு பல்வேறு மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர்.

## சீனாவில் கொரோனா வைரஸூக்கு சனி வரை 56 பேர் உயிரிழந்தனர்



பெய்ஜிங்,ஜன.27

சீனாவில் கொரோனா வைரஸ் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது. அங்கு இரண்டாயிரம் பேர் இந்தக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் புதிய வகை கொரோனா வைரஸ் காய்ச்சல் அந்நாட்டு மக்களிடையே அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த டிசம்பர் மாத இறுதியில் வுகான் நகரில் வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது. காய்ச்சலுக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 2 பேர் நோயின் தாக்கம் முற்றி இறந்தனர். பின்னர் இந்த வைரஸ், நாட்டின் தலைநகர் பெய்ஜிங் மற்றும் ஷாங்காய் ஆகிய நகரங்களுக்கு பரவியது.

சீனாவில் நேற்று முன்தினம் காலை ஒரே நாளில் 15 பேர் மரணம் அடைந்து உள்ளனர். இதனால் வைரஸ் பாதிப்புக்கு பலியானோர் எண்ணிக்கை அப்போது 41 ஆக உயர்ந்தது. பலியானோர் அனைவரும் 55 வயது முதல் 87 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். அவர்களில் 11 பேர் ஆண்கள். 4 பேர் பெண்கள். சீனா முழுவதும் இந்த வைரஸ் காய்ச்சலுக்கு 1,650 பேர் பாதிப்படைந்து உள்ளனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் காய்ச்சலுக்கு 15பேர் பலியான நிலையில், பலியானோர் எண்ணிக்கை 56ஆக உயர்ந்துள்ளது என உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதே போன்று 323 பேர் கூடுதலாக பாதிப்பு அடைந்து உள்ளனர் என பதிவு செய்யப்பட்டு உள்ளது.

## ஈரானின் தாக்குதலில் 34 அமெ. வீரர்களுக்கு தலையில் பலத்த காயம்

ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகள் மீது இம்மாத தொடக்கத்தில் ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 34 அமெரிக்க வீரர்களுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

முன்னர் எந்த வீரரும் காயம் அடையவில்லை என்று அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தார். ஈராக்கின் தாக்குதலில் காயம் அடைந்த வீரர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடைபெற்று வருவதாக கடந்த வாரம் பென்டகன் தெரிவித்த நிலையில் தற்போது 34 வீரர்கள் தலையில் பலத்த காயம் அடைந்திருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் சில வீரர்களுக்கு லேசான தலைவலி இருப்பதாக தாம் கேள்விப்பட்டார் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir





# முஸ்லிம் காங்கிரஸ் சரிவை நோக்கி செல்கிறதா?

சரியான அடித்தளமும் கட்டுமானமும், அதே போன்று உரிய பராமரிப்பும் இல்லாத கட்டடங்கள், அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தள்ளாடுவது உலக இயற்கை.

அதைப்போலவே, முறையான கட்டமைப்பும் ஒழுங்கும் இல்லாத அரசியல் கட்சிகளும், சவால்மிக்க காலங்களில் ஏற்படும் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல், தள்ளாடுவதைக் காண முடிகின்றது. பிரதான முஸ்லிம் கட்சிகளில், இந்நிலைமை வெகுவாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள், அதன் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் உருவாக்கி வைத்திருந்த கட்டமைப்பு, கடந்த பல வருடங்களுக்குள் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை'யாகிப் போயிருக்கின்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்குள், முறையான அடிப்படையில் ஒரு கட்டமைப்பு, திட்டமிட்டு உருவாக்கப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். ஏதோ ஒரு வகையில், உருவாக்கப்பட்ட கட்டமைப்பும், கட்டுக்கோப்பு இல்லாமல் போயிருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்தை மையமாகக் கொண்டு செயற்படும் ஏனைய கட்சிகள், அரசியல் அணிகளில் கூட, 90களில் முஸ்லிம் காங்கிரஸில் இருந்த அளவுக்கு, சிறந்த கட்டமைப்பையும் கட்டுக்கோப்பையும் காணக் கிடைக்கவில்லை. முஸ்லிம் சமூகத்துக்கான அரசியல், இன்னும் 'வயதுக்கு வராமல்' இருப்பதற்கு இதுவும் ஓர் அடிப்படைக் காரணம் ஆகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை, எம்.எச்.எம். அஷ்ரபும் அவரோடு அன்றிருந்த அரசியல் முன்னோடிகளும் உருவாக்கிய போது, அதற்கு உயரிய நோக்கம் இருந்தது.

முஸ்லிம் இளைஞர்கள், ஆயுத இயக்கங்களை நாடிச் செல்வதைத் தடுத்து, அவர்களை அரசியல் மயப்படுத்தி, நல்வழிப்படுத்துவதும் தனித்துவ அடையாள அரசியல் முன்னெடுப்பின் ஊடாக, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதும் அந்த நோக்கங்கள் எனலாம்.

வெறுமனே பணம் உழைப்பதற்காகவோ, பட்டம் பதவிகளில் இருந்து கொண்டு சுக போகங்களை அனுபவிப்பதற்காகவோ, முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்படவில்லை.

இது மக்களுக்கான அரசியல் இயக்கமாக இருக்க வேண்டும் என்று, அஷ்ரபும் கட்சியின் ஸ்தாபக தவிசாளர் சேகு இஸ்ஸதீன் போன்றவர்களும் ஸ்தாபகத் தலைவரின் வலது, இடது கரங்களாக அன்றிருந்த பெயர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அரசியல் ஆளுமைகளும் நினைத்தனர்.

யுத்தமேகம் சூழ்ந்திருந்த காலப் பகுதியில், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்களின் செயற்பாடுகள், கிழக்கு மாகாணத்தில் அதிகரித்திருந்தமை; வேலை வாய்ப்பில்லாத பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் உணர்வுத் தூண்டுதலுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தமை; தமக்கு ஓர் அரசியல் கட்சி அவசியம் என்று முஸ்லிம் சமூகம் நினைத்தமை போன்ற காரணங்கள், முஸ்லிம் காங்கிரஸ் மக்களுக்குள் வியாபிப்பதற்கு ஏதுவான களத்தை, ஏற்படுத்திக் கொடுத்தது என்று கூறலாம்.

இந்தப் பின்புலத்தில், கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ், ஒவ்வோர் ஊருக்கும், வீட்டுக்கும் கொண்டு செல்லப்பட்டது. ஒவ்வொரு பிரதேசங்களிலும் மத்திய குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

மத்திய குழு உறுப்பினர்கள், கிட்டத்தட்ட இன்றிருக்கின்ற கிராம அலுவலர் போல செயற்பட்டதாகச் சொல்ல முடியும். அதற்கான தேவைப்பாடுகளும் முஸ்லிம் சமூகத்துக்கு இருந்தது. மத்திய குழு, மாவட்டக் குழு என்று அப்படியே கட்சியின் உயர்பீடம் வரை, இந்தக் கட்டமைப்பு இருந்தது.

மத்திய குழுக்கள்தான், கட்சியின் அடித்தளமாக இயங்கிய காலமது. ஓர் ஊரில், கட்சித் தலைவரால், ஒரு தொழில் நியமனத்தை வழங்குவது என்றால் கூட, மத்திய குழுவின் ஆசீர்வாதமும் ஒப்புதலும் பெறப்பட்டது.

கட்சியில் ஒழுக்கத்தை மீறியவர்கள் மீது, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் கட்சியில் இருந்து விலக்கப்பட்டதையும் நாம் மறந்து விடக்கூடாது. அந்தளவுக்கு கட்டுப்பாடு இருந்தது.

அஷ்ரப், கட்சியின் பெரும்பாலான ஆதரவாளர்களை மனதில் பதித்து வைத்திருந்ததாகச் சொல்வார்கள். அவர் வீடு தேடிச் சென்று, தொழில்களை வழங்கினார்; அபிவிருத்திகளைச் செய்தார். அவர், முஸ்லிம் சமூகத்தின் அரசியலுக்காக முன்னின்றவர் என்றாலும் தமிழ், சிங்கள இளைஞர்களுக்கும் தொழில் வழங்கினார்.

பிற்காலத்தில், தான் பலம்மிக்க அமைச்சராகி, கட்சி பெரு வளர்ச்சி பெற்று விட்டது என்பதற்காக, பிரதேச ரீதியான மத்திய குழுக்களைக் கலைத்து விடவில்லை. அவற்றை மிகவும் வினைத்திறனோடு இயங்கச் செய்தார்.

ஆனால், அவரது மறைவுக்குப் பின்னர், எல்லாம் மாறிப் போய்விட்டன. அதற்குப் பிறகு, தலைவராகப் பொறுப்பேற்ற ரவூப் ஹக்கீமின் அணுகுமுறை, அவரை, இரண்டாம்நிலைத் தலைவர்கள் வழிப்படுத்துவதில் விட்ட தவறுகள், இக்கட்சியை, ஓரிருவரை மய்யமாகக் கொண்ட கட்சியாக மாற்றி விட்டிருக்கின்றது எனலாம். இந்தப் பின்னணியில், கட்சிக் கட்டமைப்பு சீர்குலைந்து போனது.

முன்னைய காலங்களில், ஒவ்வோர் ஊரிலும் முஸ்லிம் காங்கிரஸுக்குப் பலம்மிக்கதொரு மத்திய குழு இருந்தது. இதை அடித்தளமாகக் கொண்டு, கட்சி கட்டமைக்கப்பட்டிருந்தது.

ஆனால், 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு, மெதுமெதுவாக அந்நிலைமை மாறியது. பல ஊர்களில் மத்திய குழுக்கள் பிளவுபட்டன. உண்மைப் போராளிகள் அல்லாமல், வெறுமனே பம்மாத்துக் காட்டுகின்ற ஆட்களுக்கும் மத்திய குழுவில் இடம் வழங்கப்பட்டது. சில மூத்த அரசியல் செயற்பாட்டாளர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

மத்திய குழு என்ற அடிநாதம், சீர்கெட்டுப் போனதால், மேலுள்ள அடுக்குகளில் இருந்த பதவிக் கட்டமைப்புகளும் ஆடிப்போயின. கட்சிக்குள் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்கின்ற நடைமுறையும் தூர்ந்து போனது. ஒருவரை நோக்கி, மற்றவர் விரல் நீட்டியதால், யார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என்ற சிக்கல் உருவானது.

இவ்வாறாக, மு.காவின் கட்டமைப்பு, கட்டுக் குலைந்ததால், பல ஊர்களில் இரண்டு அணிகள், அக்கட்சிக்குள்ளேயே உருவாகியுள்ளன. இதைச் சீர்படுத்தி, கட்டமைப்பை மறுசீரமைக்க, தலைவர் ரவூப் ஹக்கீமோ பிரதித் தலைவர்களோ, செயலாளரோ காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆனாலும், இன்னும் பெயரளவிலாவது மத்திய குழுக்கள் இருக்கின்றன.

இந்தப் போக்கு, முஸ்லிம் காங்கிரஸை, ஒவ்வொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்குப் பெரும்பாடுபட வேண்டிய நிலைமைக்குள் தள்ளியுள்ளது. கட்சிப் பாடல்களையும் உணர்ச்சிப் பேச்சுகளையும் நம்பி, அரசியல் செய்யாமல், சரியாகக் கட்சிக் கட்டமைப்பைப் பேணி, மக்கள் சார்பு அரசியலில் இறங்கியிருந்தால் மு.காவுக்கு, தேர்தல்கள் இவ்வளவு சவாலானவையாக இருந்திருக்காது.

இதேவேளை, அடுத்த முஸ்லிம் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலும் கட்சியின் கட்டமைப்பு, முறையானதாக இல்லை. இதனால், கட்சிக்குள், 'கம்பெடுத்தவர் எல்லாம் வேட்டைக்காரராக' வருவதற்கு முயற்சிக்கின்ற பாங்கிலான போக்குகளை அவதானிக்க முடிகின்றது.

முஸ்லிம் காங்கிரஸில், அஷ்ரப் காலத்தில் இருந்த கட்டமைப்புத்தான் பின்னர் சீர்குலைந்தது. அதாவது இருந்தது; பின்னர் இல்லாமல் போனது.

ஆனால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பொறுத்தமட்டில், அக்கட்சி ரிஷாட் பதியுதீன் என்ற தனிப்பட்ட அரசியல்வாதியாலும் அவரோடு இருந்தவர்களின் முயற்சியாலும் உருவாக்கப்பட்டதாகும். இருப்பினும், முறையான கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை என்பதே, இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்கை, ரிஷாட் பதியுதீன் வகிக்கின்றார் என்று சொல்ல முடியும். அவருடைய, அரசியல் போக்குத்தான், அக்கட்சி இன்று இந்தளவுக்கு வியாபித்திருப்பதற்கு காரணமாகும்.

தவிர, அக்கட்சியில் இருக்கின்ற 'முக்கிய' அரசியல்வாதிகளில் அநேகர், மக்கள் சேவையை விட்டும் தூரமாகவே இருக்கின்றனர். அதனால், கட்சி வளர்ச்சியில் சொற்பமான பங்களிப்பையே இவ்வாறானவர்கள் வழங்கியதாகக் கருத முடிகின்றது.

றிட்டால் அவசர அவசரமாக ஆரம்பிக் கப்பட்ட கட்சி என்பதாலும், அக்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கோலோச்சிக் கொண்டிருந்ததுடன் ஏ.எல்.எம். அதாவுல்லா போன்ற, மாற்று அரசியல் அணிகளும் பலமான நிலையில் இருந்தமையாலும், (அஷ்ரப் மு.காவுக்கு உருவாக்கியதைப் போல) சிறந்த தொரு கட்சிக் கட்டமைப்பை, மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு உருவாக்க அவகாசம் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். வடமாகாணத்தில் கட்சிக்கு பிரதேச வாரியாக, ஓரளவுக்கு மத்திய குழுக்களுக்கு நிகரான ஒரு கட்டமைப்புக் காணப்பட்டாலும், கிழக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் அவ்வாறான நிலை இருக்கவில்லை.

2010ஆம் ஆண்டு வரை, ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் பெரியளவில் கூட எடுக்கப்படவில்லை என்பதால், மக்கள் காங்கிரஸ் களமிறங்காத பிரதேசங்களில் உறுதிமிக்க ஒரு கீழ்மட்ட கட்டமைப்பு, அவர்களுக்கு அத்தியாவசியமானதாகத் தோன்றியிருக்காது.

இணைப்பதிகாரிகள், அமைப்பாளர்கள், தெரிந்த நபர்கள், அரசியல் பற்றி அறவே தெரியாதவர்களாக இருந்து கொண்டு, தம்மை உள்ளூர் அரசியல் புள்ளியாக, ரிஷாட் பதியுதீனுக்குக் காட்டியவர்கள், தொடர்பிலிருந்த நபர்கள் போன்றவர்களே, பல பிரதேசங்களில், மக்கள் காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்களாக இருந்தனர். இவர்களை வைத்தே, கட்சியும் தனது முன்னகர்வுகளைச் செய்தது.

இருப்பினும், அதற்குப் பிறகு, கடந்த சில வருடங்களுக்குள் மக்கள் காங்கிரஸ் கணிசமானதொரு வளர்ச்சியை அடைந்திருக்கின்றது. நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

இந்நிலையில், கிழக்கு மாகாணம் உள்ளிட்ட பிராந்தியங்களில் கட்சி போட்டியிட்டமையால், கட்சிக்கு ஏதோவொரு கட்டமைப்பு 2015 முதல் உருவாக்கப்பட்டு இருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனாலும், அது இன்னும் முறையாக கட்டமைக்கப்படவில்லை; பிரதேச வாரியாக, மாவட்ட ரீதியாக, தேசிய மட்டத்தில் முறையான கட்சிக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று, தலைவர் ரிஷாட், தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறி வருகின்றார். அத்துடன் அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வதாகத் தெரிகின்றது.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸின் உள்ளகக் கட்டமைப்பை மறுசீரமைக்க, யாரும் விரும்புகின்றார்கள் இல்லை என்பது போலவே, மக்கள் காங்கிரஸுக்குள்ளும் பலமான அதேநேரம் முறைமையான ஒரு கட்சிக் கட்டமைப்பை பிரதேச, மாவட்ட ரீதியாக உருவாக்க யாரோ அல்லது எதுவோ தடையாக இருப்பதாகத் தோன்றுகின்றது. குறிப்பாக, தமது கையில் 'பிடியை வைத்திருக்க' ஒருசிலர் முனைவதாகவும் ஒரு கருத்திருக்கின்றது.

மு.காவைப் போலவே, மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் இப்போது பிரதேச வாரியாக இரண்டு அணிகள் தோற்றம் பெற்று வருகின்றன. கிழக்கில் அதுவும் அம்பாறை மாவட்டத்தில், இந்த நிலைமைகளை அதிகம் அவதானிக்க முடிகின்றது. ஓர் ஊரில், இரண்டு அணிகள் தனித்தனியாகக் கூட்டம் நடத்துவது, இதைப் பகிரங்கமாக்குகின்றது.

அதேபோன்று, கட்சிக்குள் முறையான கட்டமைப்பை உருவாக்குவதன் ஓர் அங்கமாக, கடந்த வாரம் தலைவர் ரிஷாட் தலைமையில், அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில், முரண்பாடுகள் வெளிப்பட்டதாக அறிய முடிகின்றது.

அது உண்மையென்றால், ஊர் வாரியாக, உட்கட்சிப் பிரிவுகள் இருப்பதை மட்டுமன்றி, கட்சிக்குள் கட்டமைப்பும் கட்டுக்கோப்பும் வளர்க்கப்படவில்லை என்பதைக் குறிப்புணர்த்துவதாகவே அமைகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் என்றாலும் சரி, மக்கள் காங்கிரஸ் என்றாலும் சரி அல்லது தேசிய காங்கிரஸ், நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு போன்ற இதர முஸ்லிம் கட்சிகளாக இருந்தாலும் சரி, உட்கட்சி முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும்.

ஊர்களுக்குள் இருந்த அணிகளை, மர்ஹூம் அஷ்ரப் சமரசம் செய்து வைத்ததைப் போல, பிரதேச வாரியாகப் பிரிந்து செயற்படுவோரை ஓரணியில் சேர்க்க வேண்டும். இவற்றையெல்லாம் மேற்கொண்டகையோடு, கட்சிகளுக்குள் சிறந்ததொரு கட்டமைப்பையும் கட்டுக் கோப்பையும் கட்டமைக்க வேண்டும். இதன்மூலம், மக்கள் சார்பு அரசியலை மேற்கொள்வதானது, மிக இலகுவாக, நீண்டகாலம் அரசியலில் நிலைத்திருப்பதற்கான அடிப்படை நிபந்தனையாகும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் இந்தியக் குடியரசு தின 71 ஆம் ஆண்டு நிகழ்வு





யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியக் குடியரசுத் தின 71 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்றுக் கோலாகலமாக நடை பெற்றது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரக அலுவலகத்தில் துணைத் தூதுவர் கே.பாலசந்திரன் தலைமையில் நடைபெற்றது. குடியரசு தின நிகழ்வின் ஆரம்ப நிகழ்வுகள் பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் நடைபெற்றது.

அதன்பின்னர் இந்திய நாட்டின் தேசியக் கொடியைத் துணைத் தூதுவர் பாலசந்திரன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இந்திய குடியரசுத் தலைவரின் குடியரசு தின உரையை துணைத் தூதுவர் வாசித்தார்.

இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள்,மதத் தலைவர்கள்,பொலிஸ் அதிகாரிகள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ - 07)

## வவுனியாவில் 3 பெண்கள் கைது

வவுனியா, ஜன. 27

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் பெறுமதியான பொருள்களைத் திருடித்தப்பியோடிய மூன்று பெண்களையும் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தில் வசிக்கும் 22, 45 மற்றும் 62 வயதுகளை உடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள பெண்கள் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் திருடியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## சீனாவிலிருக்கும் 150 மாணவர்கள் 48 மணி நேரத்தில் இலங்கைக்கு!

கொழும்பு, ஜன. 27

கொரோனா வைரஸ் தொற்று பரவிவரும் சீனாவின் வுஹான் மற்றும் சிச்சுஹான் மாநிலங்களில் வசிக்கும் மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கையர்களையும் உடனடியாக மீள நாட்டுக்கு அழைத்து வருவதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்காக ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, பீஜிங்கில் அமைந்துள்ள இலங்கைக்கான தூதரகம் மற்றும் ஸ்ரீ லங்கன் விமான சேவை இணைந்து விசேட செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளன.

வுஹான் மாநிலத்தில் இருந்து வெளியேறுவதற்கும் மற்றும் உள்நுழைவதற்கும் தற்போதைய நிலையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை நீக்கி உடனடியாக அங்கிருக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர அனைத்து சட்ட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிச்சுவான் மாநிலத்தில் வசிக்கும் சுமார் 150 இலங்கை மாணவர்களை எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் இந்நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானத்தை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியுறவு தொடர்பான ஜனாதிபதி மேலதிக செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (ஐ)

## 75 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ

கொழும்பு, ஜன. 27

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் கேரளினா பகுதியில் வீதியை விட்டு விலகி முச்சக்கர வண்டி ஒன்று 75 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவர் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 03.00 மணியளவில் இடம் பெற்றதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து டயகம பகுதியை நோக்கிப் பயணித்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் ஓட்டோச் சாரதிக்கு நித்திரை ஏற்பட்ட காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த 2 பேரில் ஒருவர் நாவலபிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் ஆண்டு விழாவும், மலர் வெளியீடும்






யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீடும் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில், யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் தலைவர், வைத்திய கலாநிதி எஸ்.நிமலன் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றது.

விழாவின் ஆரம்பத்தில் மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம்,வரவேற்பு நடனம், தலைமையுரை, ஆசியுரை என்பன முறையே இடம்பெற்றன.

நூற்றாண்டு மலரை சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வெளியிட்டு வைத்தார்.

இந்த விழாவில் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம், யாழ் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ 07)

## டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை மட்டக்களப்பில் தொடர்ந்தும் உயர்வு

மட்டக்களப்பு, ஜன.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்புத் தாக்கம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

ஜனவரி 3 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை 248 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வாரம் மட்டக்களப்பு பிரிவிலேயே இதுவரை 36 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த பிரதேசத்திலே அதிக நோயாளர்கள் டெங்குத் தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக வைத்தியர் வே. குணராஜசேகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மக்கள் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக வைத்து கொள்ளுமாறு மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் கலாநிதி வே. குணராஜசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ)

PCP northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# இங்கிலாந்தின் மிரள வைக்கும் உலக சாதனை

டெஸ்ட் கிரிக்கெட்டில் 5,00,000 ஓட்டங்கள் எடுத்த உலகின் முதல் அணியாக இங்கிலாந்து சாதனை படைத்தது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான வாண் டரர்ஸில் நடைபெற்று வரும் நான்காவது மற்றும் இறுதி டெஸ்டின் போது இங்கி லாந்து இச்சாதனையை நிகழ்த்தியது.

கடந்த வெள்ளிக்கிழமை டெஸ்ட் போட் டியின் முதல் நாளின் போது இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் ஓட்டங்கள் அடித்தபோது, இங் கிலாந்து அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் 5,00,000 ஓட்டங்களை அணி எட்டியது.

இங்கிலாந்து அணி தனது 1022 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்த சாத னையை நிகழ்த்தியுள்ளது.

இந்த பட்டியலில் 830 டெஸ்ட் போட் டி களில் 4,32,706 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இதற்கிடையில், இந்தியா 540 டெஸ்ட் போட்டிக ளில் 2,73,518 ஓட்டங்க ளுடன் மூன்றாவது இடத் தில் உள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் 545 டெஸ்ட் போட்டிகளில் 2,70,441 ஓட் டங்கள் எடுத்துள்ளது.

போர்ட்எலிசெபெத்தில்உள்ளசெயின்ட் ஜோர்ஜ் பூங்காவில் விளை யாடிய மூன்றாவது டெஸ்டில், வெளிநாட்டு மண்ணில் 500 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் அணியாக இங்கி லாந்து சாதனை படைத்தது.

அடுத்தபடியாக வெளிநாட்டு மண் ணில் 404 டெஸ்ட் போட்டிகளில் விளை யாடி ஆஸ்திரேலிய அணி இரண்டா வது இடத்திலும், 268 டெஸ்ட் போட்டிக ளில் விளையாடியுள்ள இந்திய மூன்றா வது இடத்திலும் உள்ளன.

ஒரு நாள் போட்டியில் அதிக ஓட்டங் கள் அடித்த அணிகள் பட்டியலில் 2,18,808 ஓட்டங்களுடன் இந்திய முத லிடத்தில் உள்ளது. டி - 20 போட்டியில் 22,125 ஓட் டங்களுடன் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது.



# ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையை சாடும் வோர்ன்

ஆஸ்திரேலிய முன்னாள் வீரரான டேவிட் ஹஸிக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளதை ேன் வோர்ன் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடக்கும் உள்ளூர் தொடரான பிக்பாஷ் லீக் (Big Bash League) குறித்து ரி.வியில் விளையாட்டாக பேசிய டேவிட் ஹஸ்ஸிக்கு ஆஸ் திரேலிய கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.

பிக்பாஷ் தொடரில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியின் பயிற்சியாளராக டேவிட் ஹஸி உள்ளார். கடந்த புதன்கிழமையன்று அடிலெய்ட் ஸ்ட்ரைக் கர்ஸ் அணியை எதிர்த்து மெல்போர்ன் அணி விளையாடியது. போட்டி நேரலையில் ஒளிபரப் பானபோது ஹஸ்ஸியுடன் வர்ணணையாளர்கள் உரையாடினர். அப்போது, 'பிட்ச் - ன் தன்மையை அறிவதற்காகச் செல்லும்போது காலில் ஸ்பைக்ஸ் அணிந்திருந்தேன்' என விளையாட்டாக ஹஸி கூறினார்.

இதையடுத்து நடத்தை விதியை மீறியதாக டேவிட் ஹஸிக்கு 2000 டாலர் அபராதம் விதித்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம். கிரிக்கெட் விதி களின்படி போட்டி தொடங்குவதற்கு முன்பு அணி யின் கேப்டன் மற்றும் பயிற்சியாளர்கள் பிட்ச்சை பார்வையிடலாம். அப்போது, காலில் ஸ்பைக்ஸ் கொண்ட ஷுக்களை அணிந்திருக்கக் கூடாது.

உண்மையில் அந்தப் போட்டியின்போது மைதானத்தைப் பார்வையிடச் சென்ற ஹஸி காலில் ஸ்பைக்ஸ் அணிந்திருக்கவில்லை. அவர் ரி.வியில் நகைச்சுவையாக கூறியதையடுத்து, ஆஸ்திரேலிய கிரிக்கெட் விதி 2.23ஐ மீறியதாக அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துப் பேசியுள்ள ஹஸி, "அடி லெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்கு எதிரான போட்டி யின்போது நான் கூறிய கருத்துகளுக்கு மன்னிப் புக் கேட்க விரும்புகிறேன். வர்ணணையாளர்க ளுடன் பேசும்போது ஒரு நகைச்சுவையாக இந் தக் கருத்தைத் தெரிவித்தேன்.

கிரிகெட் விதிகளுக்கு எதிராக எந்த உள் நோக்கத்தோடு நான் அந்தக் கருத்தை தெரிவிக்க வில்லை. என்னுடைய கருத்துகள் எங்கள் ஆதர வாளர்களுக்கும், ரசிகர்களுக்கு ஒளிபரப்பப் படுவதை உணர்கிறேன். ஒருவேளை இது கிரிக்கெட் உணர்வைக் குறைத்து மதிப்பிட்டிருக்கலாம் இதற் காக வருந்துகிறேன் மன்னிப்புக் கேட்கிறேன் என்றார்.

டேவிட் ஹஸ்ஸிக்கு அபராதம் விதித்ததை வர்ணணையாளரும் முன்னாள் வீரருமான ேன் வோர்ன் கடுமையாக விமர்சித்துள்ளார். "இது கேலிக்குரியது. போட்டியின்போது வீரர்களுடன், பயிற்சியாளர்களுடன் பேசுவது எங்களுக்கு கிடைத்த அருமையான வாய்ப்பு. அவர்கள் எங்களுடன் பேசுவது கொஞ்சம் நகைச்சுவையாகவும் வேடிக் கையாக இருக்க வேண்டும். நீங்கள் அதுபோன்ற உரையாடல்களை நிறுத்த முயற்சி செய்யாதீர் கள். 2,000 டாலர் அபராதம் எல்லாம் கொஞ்சம் ஓவர். அபராதத்தை திரும்பப்பெறுங்கள் என வோர்ன் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

# உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் பங்கேற்காது!

2021ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற வுள்ள ரி - 20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்க மாட்டோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எச்ச ரிக்கை விடுத்துள்ளது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத்தி, நீண்ட கால மாக பாகிஸ்தான், தன்னுடைய நாட்டில் சர்வ தேச தொடர்களை நடத்துவதிலுருந்து விலகி இருந்தது. இந்நிலையில், இந்த ஆண்டு நடைபெற விருக்கும் 20 ஓவர் ஆசிய கிண்ணத்தையை பாகிஸ்தானில் நடத்த, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தீவிரமாக இயங்கி வருகிறது.

பாகிஸ்தானுக்குச் சென்று இந்திய அணி, 20 ஓவர் ஆசியக் கிண் ணத்தில் விளையாடும் நிலைப்பாட்டை இன்னும் இந்திய கிரிக்கெட் சபை அறிவிக்கவில்லை.

இது தொடர்பாக லாகூரில் செய்தியாளர் களிடம் பேசிய அந்த நாட்டு கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி வாசிம் கான், வரு கின்ற செப்ரெம்பர் மாதம் தங்கள் நாட்டில் நடை பெற உள்ள ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி யில் விளையாட இந்தியா மறுப்பதாக குற்றஞ்சாட் டினார்.

இதனால் இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ரி - 20 உலகக்கிண்ணப் போட் டியில் பாகிஸ் தான் பங்கேற்காது என்று அவர் எச்சரிக்கை விடுத்துள் ளார்.

பாகிஸ்தானுக்கு இந்திய அணி சுற்றுப் பயணம் மேற் கொள்ள மறுப்பதால் ஆசியக் கிண்ணத் தொடர் பங்களா தேஷுக்கு மாற்றப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சாந்தையில் சிறப்புடன் நடைபெற்ற கைக்கொடி மாட்டுச் சவாரி போட்டி!







சாந்தை ஸ்ரீ உற்சவத்தை முன்னிட்டு வெண்கரம் அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கைக் கொடி மாட்டுச் சவாரி போட்டி நேற்று முன்தினம் சனிக் கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

சாந்தை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆலய தர்மகர்த்தா செ.தனுசன் தலைமையில் நடைபெற்ற பண்டத்தரிப்பு சாந்தை சவாரித்திடலில் மாலை 4.00 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய கைக்கொடி மாட்டுச் சவாரி போட்டியானது அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுக ளில் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் சிறப்பு பங்கேற்பாளர்களாக வெண் கரம் அமைப்பின் செயற்பாட்டாளர்களான மு.கோமகன், பி.பொன்ராசா, இரா.மயூரதன், மற்றும் வெண்கரம் அமைப்பின் சாந்தை - சில்லாலை படிப்பகத்தின் தலைமை செயற்பாட்டாளர் ஏ.எஸ்.சந்திரன், வலி.தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.தர்மகுலசிங்கம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்திருந்ததுடன் போட்டி களை நெறியாள்கை செய்திருந்தனர். ஊர்மக்கள் பலரும் வயது வேறுபாடின்றி ஆர்வமுடன் கலந்து கொண்டு பார்வையிட்டிருந்தனர்.

'அ' பிரிவு வில் முதலாமிடம் - சிந்துயன், இரண்டாமி டம் - சுவிஸ்திகா, மூன்றாமிடம் - வசந்தன் ஆகியோ ரும், 'ஆ' பிரிவில் முதலாமிடம் - சுவிந், இரண்டாமிடம் - சிந்துஜன், மூன்றாமிடம் - வசந்தன் ஆகியோரும், 'இ' பிரிவில் முதலாமிடம் - தினிஸ்ரன், இரண்டாமிடம் - வசந்தன், மூன்றாமிடம் - கனிஸ்ரன், நான்காமிடம் - அனிதராஜ் ஆகியோரும் பெற்றிருந்தனர். இவர்களுக் கான பரிசில்கள் ஆலயத் திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கிவைக்கப்பட உள்ளமை குறிப்பிடத் தக்கது.

# 100 ரூபா சம்பள விவகாரம்: தடுமாறி வருகின்றது அரசு

## வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 27

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ள நிலையில், அந்தப் பொறிமுறையை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தெரியாமல் அரசு திண்டாடிவருகின்றது என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் விமர்சித்துள்ளார்.

தெளிவான கொள்கையோ, தூரநோக்கு சிந்தனையோ இந்த அரசிடம் கிடையாது என்பதையே இது உறுதிப்படுத்துகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு காலத்தை இழுத்தடித்து, தொழிலாளர்களை ஏமாற்றாமல் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான தெளிவான பொறிமுறை என்னவென்பதை அரசு அறிவிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1500 ரூபா வருமானம் கிடைப்பது உறுதிசெய்யப்படும் என ஜனாதிபதி தேர்தலின்போது நாம் அறிவித்திருந்தோம். அதற்கான பொறிமுறை என்னவென்றும் தெளிவாக எடுத்துரைத்தோம்.

எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வேதனமாக ஆயிரம் ரூபாய் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கட்டளையை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். ஆனால் அது எவ்வாறு சாத்தியப்படும் என்பது பற்றி அவர் உரிய தெளிவுபடுத்தல்களை முன்வைக்கவில்லை.

இருந்தும் அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைத்துவிட்டது என்பதுபோல் ஆளுங்கட்சியில் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் பிரமாண்ட அறிவிப்புகளை விடுத்தனர்.

எனினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வாறு சம்பள உயர்வை வழங்குவது என தெரியாமல் அரசாங்கம் தடுமாறுகின்றது. மறுபுறத்தில் நிறுவனங்களும் கைவிரிக்கும் போக்கிலேயே கருத்துரைத்து வருகின்றன.

நிறுவனங்களுக்கு வரிச்சலுகை மற்றும் நிவாரணங்களை வழங்குவதன் ஊடாக ஆயிரம் ரூபா இலக்கை எட்டலாம் என ஆரம்பத்தில் கூறிய பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஆயிரத்துக்கு மேல் வருமானம் பெறுவது பற்றிய வழிமுறையை ஆராயவேண்டும் என தற்போது அறிவிப்பு விடுக்கின்றார்.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைப்பதற்கு நாம் எதிர்ப்பு வெளியிடவில்லை. அதற்கான தெளிவான வேலைத்திட்டத்தை அரசு முன்வைத்தால் முழுமையான ஆதரவை வழங்குவோம். நிறுவனங்களுக்கும் உரிய அழுத்தங்களை பிரயோகிப்போம்.

ஆனால், ஆயிரம் ரூபாவை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவதே இந்த அரசின் கபட நோக்கமாக இருக்கின்றது. அடுத்த கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை இத்தொகையை எவ்வாறு வழங்குவது என்பது பற்றிய தெளிவான கொள்கையும் இல்லை. எனவேதான், இந்த விடயத்தில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்குமாறு வலியுறுத்துகின்றோம் – என்றார். (ஐ)

## முஸ்லிம் காங்கிரஸ்...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

### புத்திஜீவிகள் உள்வாங்கப்படுதல் அவசியம்

கல்வி அறிவில்லாத பலருக்கு 'அரசியல்வாதி' என்ற பதவியும் அரசியல் அதிகாரமும் கிடைத்திருக்கின்றது. புத்திஜீவிகள் பலரை இந்த அரசியல் களம் கண்டு கொள்ளாமலும் விட்டிருக்கின்றது.

நமக்குத் தெரிந்த இலங்கை அரசியலில், க.பொ.த. சாதாரண தரம் அல்லது உயர்தரம் கூட சித்தியடையாத எத்தனையோ பேர் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஆனால் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒன்றில், அரசியலை சாக்கடை என்று எண்ணி ஒதுங்கி இருக்கின்றனர். அல்லது, அரசியல் போட்டியில் தோற்றுப் போகின்றவர்களாக இருப்பதைத் தொடர்ச்சியாக கண்டு வருகின்றோம்.

இந்த நிலை ஓரளவுக்கேனும் மாறுவதற்கு தேசியப்பட்டியல் எம்.பி முறைமை வழிகோலும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட போதும், பிற்காலத்தில் அந்த எதிர்பார்ப்பு பெரும் ஏமாற்றமாக மாறியது.

எது எவ்வாறிருப்பினும், இலங்கை அரசியலில் இது விடயத்தில் புரட்சிகர மாற்றமொன்றை நிகழ்த்த வேண்டியிருக்கின்றது.

அரசியல் கட்சித் தலைமைகள் அதிலும் குறிப்பாக, முஸ்லிம் தலைவர்கள் தம்மோடு புத்திசாலிகளை, படித்தவர்களை கட்சிக்குள் வைத்திருப்பதற்கு பின்வாங்குவதான ஒரு தோற்றப்பாட்டை அவதானிகள் உற்று நோக்கியுள்ளனர்.

பெரும்பாலும் 'ஆமா சாமிகளே' அரசியல்வாதிகளுக்குப் பிரியமானவர்களாகப் பார்க்கப்படுகின்றனர்.

எல்லா விடயங்களையும் விமர்சன ரீதியாக நோக்குகின்றவன், தட்டிக் கேட்கின்றவன், அறிவாளி, துறைசார்ந்த வல்லுநர்களை அரசியல் விவகாரங்களில் தமக்குப் பக்கத்தில் வைத்திருக்க அரசியல் தலைமைகள் பெரிதும் விரும்புவதில்லை.

அவர்களைக் கையாள்வதில் உள்ள நடைமுறைச் சிக்கலும் தர்மசங்கடமும்தான் இதற்கு அடிப்படைக் காரணங்களாகும்.

நடைமுறை அரசியலுக்காக அல்லது சுய இலாபத்துக்காக ஏதாவது ஒரு தீர்மானத்தை எடுக்கின்ற போது, கட்சியில் விடயமறிந்த, படித்தவர்கள் இருப்பாராயின் அவர்களுக்கு நியாயம் கற்பிப்பதானது கீழ்மட்ட மக்களை ஏமாற்றுவது போல, இலகுவான காரியமல்ல. இதுவும் தலைவர்களுக்கு ஒரு தலையிடியாகும்.

ஆனால் பொதுவெளியில் இதுபற்றி வினவப்படுகின்ற போது, அவன் அதிகம் படித்தவன், அவனைக் கட்டுப்படுத்த இயலாது, நாம் சொல்வதைக் கேட்க மாட்டான் என்று பல காரணங்கள் இதற்குச் சொல்லப்படுவதுண்டு. இதில் உண்மை இல்லாமலும் இல்லை.

நமது நாட்டில், எத்தனை முஸ்லிம் புத்திஜீவிகள், படித்தவர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், துறைசார் வல்லுநர்கள், சட்டத்தரணிகள் இருக்கின்றார்கள். ஆனால் இவர்களுள் பலர், பொது விடயங்களிலோ, அரசியல் விவகாரங்களிலோ ஈடுபாடு காட்டுவது கிடையாது.

இப்போதிருக்கின்ற அரசியல் கலாசாரத்தை முற்றாக வெறுப்பதாகவும் அது தமக்குப் பொருத்தமற்றது என்றும் சொல்கின்ற இத்தகையர்களில் அநேகர், தத்தமது தொழிலிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துகின்றனர்.

தொழில் முன்னேற்றமும், செல்வத்தைச் சம்பாதிப்பதுமே கணிசமானோருக்கு இலக்காக இருக்கின்றது. ஒரு சிலருக்கு, கொழுத்த சீதனம் வாங்குவதோடு எல்லாம் முடிவுக்கு வந்துவிடுகின்றது.

உண்மையில், படித்தவர்கள் எல்லாரும் அறிவாளிகளும் இல்லை; புத்திஜீவிகளும் இல்லை; சமூக செயற்பாட்டாளர்களும் இல்லை. அத்துடன் அவர்களில் நிறையப் பேருக்கு, யதார்த்தமான அரசியல் நடைமுறை தெரியாது.

எனவே, அரசியல் தலைமைகளால் 'ஏட்டுச் சுரக்காய்' போலவே கருதப்படுகின்றார்கள்.

இதையெல்லாம் கடந்து, அரசியல் பற்றிய திறனாய்வு அறிவும், சமூகம் பற்றிய தூரநோக்குமுள்ள பல புத்திஜீவிகள் முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கின்றனர். இவர்களுக்குத் தனித்து அரசியல் செய்யப் போதுமான நிதி வசதி இல்லை.

நிதி வசதி இருப்பவர்கள் நடைமுறை அரசியலின் வளைவு சுழிவுகளை அறியாதவர்களாக இருக்கின்றனர். இரண்டும் இல்லாதவர்கள், வேறு அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளுடன் இணைந்து செயற்படப் பின்வாங்குகின்றனர். அல்லது, அரசியல்வாதிகளால் கண்டு கொள்ளாமல் விடப்படுகின்ற நிலைமைகளே காணப்படுகின்றன.

இருப்பினும், இவற்றையெல்லாம் கடந்து, உலக அரசியல், பொருளாதாரம் பற்றிய அறிவுள்ளவர்கள், முஸ்லிம் சமூக சிந்தனையுடன், பணியாற்றுவதற்கான களத்தை எதிர்பார்த்துள்ள பலர், முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கின்றார்கள்.

எனவே, இவ்வாறானவர்களுக்கு கட்சித் தலைமைகளும் அரசியல்வாதிகளும் அரசியலுக்குள் உள்வாங்கி, வாய்ப்புகளை வழங்கி, அவர்களது ஆளுமையை, இந்தச் சமூகத்தின் விடிவுக்காகப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

## நால்வரின் மாதிரி பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றில்லை

சந்தேகத்திற்கிடமான அறிகுறிகளுக்காக பரிசோதிக்கப்பட்ட நான்கு பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை என்பதைச் சோதனைகள் உறுதிப்படுத்துகின்றன என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தொற்று நோயில் நிறுவன வைத்தியசாலையில் (ஐ.டி.எச்.) சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நான்கு பேராக அதிகரித்துள்ளது.

அவர்கள் நால்வரிடம் பெறப்பட்ட மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நால்வரில் ஒருவர் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் என்ற சுவாசத் தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. இந்தக் காய்ச்சல் சீனாவில் பரவுகின்றது.

சீனாவில் இந்த வைரஸ் காரணமாக ஓர் மாகாணத்தைச் சேர்ந்த மக்களை வேறு மாகாணங்களுக்குச் செல்லாதவாறு கட்டுப்பாடுகளைப் போட்டுள்ளனர். (ஐ)



# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

வவுனியா, ஜன. 27

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் எதிர்வரும் 30ஆம் திகதி மாபெரும் போராட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

எதிர்வரும் 30ஆம் திகதி காலை 10 மணிக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி பேரணியொன்றை வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்தப் போராட்டத்திற்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகர்கள், பஸ் உரிமையாளர்கள் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் கட்சி பேதமின்றி அணிதிரண்டு உங்கள் ஆதரவினையும் பங்களிப்பினையும் நல்குமாறு கேட்டுநிற்கின்றோம்.

போரின்போது இடம்பெற்ற விடயங்களை நாம் கோரவில்லை. போர் முடிவடைந்த பின்னர் ஓமந்தையிலும் வட்டுவாகலிலும் இராணுவத்திடமே எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். அத்துடன் வவுனியா, மன்னாரில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளிற்குள் எமது உறவுகள் காணாமல்போக செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை புலிகள் பிடித்து சென்றனர் எனக் கூறுகின்றமை எப்படி சாத்தியமாகும் – என்றனர்.

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



90 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2020இல் வெளியிடப்பெற்றது.